**Copy of Deposition**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண். 126 /2024</u>**

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் திங்கள்கிழமை திரு.நல்லசாமி த/பெ.பொன்னுசாமி என்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திருமதி.M. முல்லை, பி.ஏ., எம்.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நல்லசாமி | தொழில் | : |
| தந்தை / கணவர் பெயர் | : பொன்னுசாமி | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுக்கா | : | | |

**<u>வா.சா.1 : முதல் விசாரணை :</u>**

நான் இந்த அசல் வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1.12.2021ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும்

வாதி பெயரிலுள்ள பட்டா 2275 இணைய நகல் வா.சா.ஆ.2 ஆகவும்

புல எண்.1066ன் அ-பதிவேடு இணைய நகல் வா.சா.ஆ.3 ஆகவும்

20.1.2022ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் இணைய நகல் வா.சா.ஆ.4 ஆகவும்

ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.162/2021ன் பிராது நகல் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்

வாதி தரப்பில் மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து /கைரேகை பெறப்பட்டது.

sd/-xxx(M.Mullai)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.